செயலாற்றுகை அறிக்கை
2025

தலைப்பு - 102

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு
செலவினத் தலைப்பு இலக்கம்: 102

அத்தியாயம் 01	-	நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு	………………...	03
அத்தியாயம் 02	-	முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு	………………...	09
அத்தியாயம் 03	-	2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	………………...	12
அத்தியாயம் 04	-	செயலாற்றுகை சுட்டிகள்	………………...	19
அத்தியாயம் 05	-	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	………………...	20
அத்தியாயம் 06	-	மனித வள விபரம்	………………...	24
அத்தியாயம் 07	-	இணக்க அறிக்கை	………………...	27

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இலங்கையில் பிரதான அமைச்சரவை அமைச்சு ஆகும். முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதனை உறுதிசெய்யும் வகையில், நபட்டின் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளை வகுத்தல் முன்மொழிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியன இதன் முக்கிய பொறுப்புக்களில் அடங்கும்.

தற்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்கள் நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக செயற்படுகின்ற அதேவேளையில், அவரின் கீழ் இரு பிரதி அமைச்ச்சர்கள் மற்றம் திறைசேரியின் செயலாளர் மற்றும் மூன்ற உதவிச்செயலாளர்கள் கடமைகளை மேற்கொள்கின்றார்.

1.2 அமைச்சின் தோற்றம்

1947 ஆண்டு சுதந்திரத்தை தொடர்ந்து பிரதமர் நிதி அமைச்சரை நியமித்து நிதி மற்றும் திறைசேரியானது உருவாக்கப்பட்டது. நாட்டின் நிதி விவகாரங்களை நிர்வகித்ததோடு, இந்த அமைச்சு புதிய அரசாங்கத்தின் நிர்வாக கட்டமைப்பினை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றியது. 1950களில் அரச வருமானத்தில் வரி வருமானமே முதன்மை ஆதாரமாக காணப்பட்டதோடு ஏற்றுமதி அறக்குமதி வரிகள் கணிசமான பகுதியாகக்காணப்பட்டன. அது றாடானது வெளிநாட்டு வர்த்தகத்தில் பெறுமளவில் சார்ந்திருந்ததை பிரதிபலித்தது. வருமான வரித்துறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு, புள்ளிவிபரத்துறை, அரசாங்க அச்சகம் மற்றும் தேசிய களஞ்சியம் உள்ளிட்ட பல முக்கிய துறைகளானது இவ் அமைச்சின் கீழ் இயங்கின.

1948இல் இலங்கை அரசாங்கமானது ஒரு மத்திய வங்கியை உருவாக்குவதற்காக ஐக்கிய அமெரிக்காவிடம் தொழிநுட்ப உதவியை கோரியது. அமெரிக்க பொருளாதார நிபுணர் திரு. ஜோன் எக்ஸ்ட்ரின் பரிந்துறைகளுக்கமைய 1949இல் இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்டதுடன், இலங்கை ரூபா நாட்டின் நாணய அலகாக ஏற்றக்கொள்ளப்பட்டது. 1950இல் இலங்கையானது சர்வதேச நாணய நிதியத்தில் (IMF) உறுப்புரிமையை பெற்றதனால் உலகலாவிய நாணய ஒத்துழைப்பு மற்றம் நிதிநிலைத்தன்மையை மேம்படுத்துவதில் உறுதியாகவுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளின் குழுவில் இணைந்தது.

1.3 அமைச்சின் விடயப்பரப்பு

பேரண்ட பொருளாதார கொள்கைகள், வரவுசெலவுத்திட்டம் மற்றும் ஒதுக்கீட்டு சட்டம், இறை முகாமை உள்நாட்ட வெளிநாட்டு சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகள் பொதுக்கடன், வங்கி, நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள், சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சமூகப்பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளளை வழிநடாத்துதல் தொடர்பான பொறுப்புக்களை உள்ளடக்கியது.

1.4 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

“துரித அபிவிருத்திக்கும் முதலீட்டுக்கும் வசதியளிக்கும் பொருளாதாரச் சூழலொன்றின் ஊடாக புதியதோர் இலங்கை”

பணிக்கூற்று

“மக்களுக்கு ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு முதலீட்டையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்காக வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், அரசிறைக் கொள்கைகளையும் வடிவமைத்தல், முன்மொழிதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்”

குறிக்கோள்கள்

- நாட்டின் தேசிய பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகள் என்பனவற்றினையும் மூலோபாயங்களையும் தயாரித்தல்.
- அரசிறைக் கொள்கையை தயாரித்தல் மற்றும் பேரண்ட அரசிறைக் கொள்கை முகாமைத்துவம்
- தேசிய அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் நிதி வளங்களை முகாமை செய்தல்.
- தேசிய வரிக்கொள்கையினை முகாமை செய்தல் மற்றும் அரசாங்க வருமானத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்துதல்
- இலங்கை மத்திய வங்கியுடன் ஒன்றிணைந்து நாணயக் கொள்கைகளை உருவாக்குதல்.
- அரச மற்றும் தனியார்த்துறை செயற்பாடுகளை கூட்டிணைத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக தனியார் துறையினருக்கு வசதியளித்தல்.
- சர்வதேச முகவர்ளுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் திரட்டப்படுகின்ற வெளிநாட்டு நிதி வளங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- திரட்டு நிதியினை முகாமை செய்தல், அதனை கணக்கு வைத்தல் மற்றும் நாட்டின் வருடாந்த கணக்குகளை சர்வதேச தராரதரங்களுக்கு அமைய வெளியிடுதல்.

1.5 பிரதான பணிகள்

- அரசிறை மற்றும் வரி கணக்கிடல் விடயத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் நியதிச் சட்டமுறை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழ் வருகின்ற மேற்கூறப்பட்ட விடயங்களில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பேரண்ட நிதி முகாமைத்துவம் மற்றும் பொது நிதிக் கொள்கைகளைத் தயாரித்தல்.
- நிதி வளங்களை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்.
- வரவு செலவு பற்றிய நிதி கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேசிய வரவு செலவு திட்டத்தில் நடைமுறைப்படுத்துதல்.
- அரச வருமானத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் மற்றும் தேசிய வரிக் கொள்கைகளை முகாமை செய்தல்.

- அரச நிதி ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துதல்.
- திரண்ட நிதியத்தை முகாமை செய்தல்.
- அரச செலவின முகாமைத்துவம்.
- அரசாங்கத்தின் பெறுகை ஆலோசனைச் சேவை.
- திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிதிகளை நிர்வகித்தல்.
- அரச கணக்குகள் செயற்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி கூட்டங்களின் அறிக்கையை பேணிவருதல்.
- திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வு மேம்படுத்துவதற்காக வழிகாட்டல்களை தயாரித்தல்.
- பதவி அணி முகாமைத்துவம்
- நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஏனைய சகல விடயங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்.
- நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.
- வரி மேல்முறையீட்டு ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வரைவுசெய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க, எந்தவொரு வரி, சுங்க வரி, தீர்வைக் கட்டணம், அல்லது அபராதம் தொடர்பான பெறப்பட்ட அனைத்து மேல்முறையீடுகளையும் விசாரனைக்கு உட்படுத்தி முடிவு செய்வதற்காக ஒப்ாடைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றவதுடன்இ அணைத்து வரி மேல்முறையீடுகளையும் நியாயமாகவும் பாரபட்சமின்றியும் விசாரிப்பதற்கான முறைமையை வழங்குதல்.

1.2 நிறுவனக் கட்டமைப்பு



1.7 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 25.11.2024 வரை

01 பொதுத் திறைசேரி
02 தேசிய திட்டமிடல் திணைக்களம்
03 கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம்
04 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
05 அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
06 தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
07 முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
08 அரச நிதித் திணைக்களம்
09 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
10 அரச கணக்குகள் திணைக்களம்
11 வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்
12 சட்ட அலுவல்கள் திணைக்களம்
13 முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்
14 தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்
15 அபிவிருத்தி நிதித் திணைக்களம்
16 பொதுத் தொழில்முயற்சி திணைக்களம்
17 கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்
18 பொது படுகடன் அலுவலகம்
19 உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
20 இலங்கை சுங்கம்
21 மதுவரித் திணைக்களம்
22 விலைமதிப்பீட்டு திணைக்களம்
23 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
24 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

1.8 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் நிதிகள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிவருத்தி அமைச்சு 25.11.2024 வரை

01 இலங்கை மத்திய வங்கி
02 இலங்கை வங்கி
03 மக்கள் வங்கி
04 தேசிய சேமிப்பு வங்கி
05 இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபணம்
06 தேசிய லொத்தர் சபை
07 அபிவிருத்தி லொத்தர் சபை
08 வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம்
09 அரசு ஈட்டு, முதலீட்டு வங்கி
10 கடன் தகவல் மையம்
11 பிரதேச அபிவிருத்தி வங்கி
12 தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்
13 இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
14 அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கம்
15 இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மீளாய்வுச் சபை
16 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளும் இணை நிறுவனங்களும்
17 வரையறுத்த லிட்ரோ காஸ் கம்ானி

18 ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
19 நிலைபேறான அபிவிருத்தி சபை
20 இலங்கை பொதுப் பயன்பாடுகள் சபை
21 கொள்கை கற்கைகளுக்கான நிறுவகம்
22 அரச ஊழியர்கள் நலன்களுக்கான அமைப்பு
23 வரையறுக்கப்பட்ட லங்கா உப்பு நிறுவனம்
24 நலன்புரி நன்மைகள் சபை
25 லோகோர் சீமாட்டி நிதியம்
26 தேசிய கடன் உத்தரவாத நிறுவகம்
27 இலங்கை முதலீட்டுச் சபை
28 இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
29 அரச வழங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபணம்
30 கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
31 வரையறுக்கப்பட்ட தனியார் டேக்னோ பார்க் அபிவிருத்தி கம்பனி
32 ஹொட்டல் டிவலப்பர்ஸ் பொதுக்கம்பனி
33 கன்வில் ஹோல்டிங் கம்பனி
34 வரையறுக்கப்பட்ட புரவிடன்ட் புரப்பட்டி லங்கா லிமிடட்
35 சூதாட்டங்களை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
36 கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம்
37 கருத்திட்டங்கள்
வருமான நிர்வாக முகாமைத்துவத்திற்கான தகவல் முறைமை
ஒருங்கிணைந்த திறைசேரி தகவல் முறைமை
கலால் திணைக்களத்திற்கான வருமான நிர்வாக முறைமை
வர்த்தகத்திற்கான தேசிய ஒற்றை சேவை வழங்கள் கருத்திட்டம்
சமூக பாதுகபப்பு கருத்திட்டம்
இலத்திரனியல் கொள்வனவு கருத்திட்டம்

1.9 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

	அ) கருத்திட்டத்தின் பெயர்	ஆ) கொடைவழங்கும் முகவர்	இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில்.	கருத்திட்டக் காலம்
01	சமூகப் பாதுகாப்பு வலை கருத்திட்டம் (SSNP)	உலக வங்கி	அமெரிக்க டொலர் 200 மில்லியன்	03 வருடங்கள் (2024 – 30.09.2027)
02	நிதித்துறையை பாதுகாப்பதற்கான உறுதிப்படுத்தல் கருத்திட்டம்	உலக வங்கி	அமெரிக்க டொலர் 150 மில்லியன்	03 வருடங்கள் 2024 – 31.12.2027

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள், சவால்கள் எதிர்கால இலக்கு

- **விசேட வெற்றிகள், சவால்கள்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கு 54 பாதீட்டு முன்மொழிவுகளை சமர்ப்பித்தது. இதில் 44 மூலதன செலவு முன்மொழிவுகள் மற்றும் 10 முதலீட்டு முன்மொழிவுகள் காணப்பட்டன. 2024 முடிவில் இவ் 54 முன்மொழிவுகளில் 85 சதவீத நிதி செயலாற்றுகையை அடையப்பெற்றதோடு 12 முன்மொழிவுகளானது அமுல்படுத்துவதற்கு தயாராகவுள்ளன.

2025 ஆம் ஆண்டின் முதல் அறையாண்டில் நாட்டின் பொருளாதாரமானது 4.8 சதவீதத்தினால் விரிவடைந்ததுடன் பணவீக்கமனது வலமைக்கு திரும்பியுள்ளது. திறைசேரி முறிகளுக்கான வட்டிவீதமபனது குறைவடைந்து நிதிதித்துறையானது உறுதியடைந்துள்ளதோடு செலாவனி வீதமானது உறுதியடைந்துள்ளது. உலகலாவிய ரீதியில் உறுதியற்ற தன்மை காணப்பட்டலும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உட்பட வெயிவாரித்துறையானது தொடர்ந்தும் உறுதியாகக்காணப்படுகின்றது. வெளிநாட்டுச் செலவானி ஒதுக்கமானது, ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு மாற்றல்களின் அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக இருப்பானது ஐ.அ.டொ 6 பில்லியன்களை விட அதிகமாக காணப்பட்டது. அரச வருமானமானது 2006 ஆம் ஆண்டிற்கு பிறகு 2026 இல் மொத்த தேசிய உற்பத்திலில் 16 சதவீதத்தை தாண்டியுள்ளது. இதற்கு மேலதிகமாக 2026 இல் வரலாற்றிலே அதிகூடிய மேலதிக ஆரம்ப மீதியை பதிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது மொத்த தேசிய உற்பத்தியில் 2.3 என்ற இலக்கினை மிஞ்சியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையானது 2022 ஆம் ஆண்டின் பொருளாதார சிக்கலிலிருந்து தொடர்ந்தும் மீண்டு வருகின்றது. எமது அமைச்சானது பொதுமக்களின் வாழ்க்கை நிலைமைகளுக்கு மேலும் கஷ்டங்களை அதிகரிக்காதவகையில் பொருளாதாரத்தை முகாமை செய்து வருகின்றது. 2023 ஆரம்பத்தில் ஏற்பட்ட வெளிநாட்டு செலாவணி பிரச்சினையை சரியான முறையில் முகாமை செய்து 2024இல் சவால்களை முறியடித்து முன்னேறியுள்ளது. 2024 – 2025 காலப்பகுதியானது மோசமான பொருளாதார பிரச்சினையிலிருந்து மீண்டு உறுதிப்பாட்டினை நோக்கி முன்னேறியுள்ளது. இக்காலப்பகுதியல் முதன்மை நோக்கமானது சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்களின் கீழ் பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதார மீட்சியுமாகும். 2024 – 2025 காலப்பகுதியில் அடையப்பெற்ற பொருளாதார வளர்ச்சியானது இக்காலப்புகதியில் அமுல்படுத்தப்பட்ட கொள்கைளின் நேரடி பெறுபேருகளாகும்.

2024 மற்றும் 2025 அம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட வருமான உபாயங்னளினூடாக அதாவது மேம்படுத்தப்பட்ட வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், இணக்கத்தை மேம்படுத்ததல், டிஜிடல் மயமாக்கள் மற்றும் கடுமையான கண்காணிப்பு வழிமுறைகள் மூலம் நிறுவனத்திறனை கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் மூலமாக நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளன்னட்டுள்ளன. இந்நடவடிக்கைகள் மூலமாக இலங்கையானது 2025ஆம் ஆண்டில் தனது வருவாய் இலக்கை அடையமுடியுமாயிற்று.

➢ 2025 ஆம் ஆண்டின் முக்கிய பொருளாதார சாதனைகள்:

- எமது பொருளாதாரமானது 2024 ஆம் ஆண்டிள் முதல் பாதியில் 4.6 சதவீத வளர்ச்சியிலிருந்துஇ 2025 ஆண்டின் இதே கால கட்டத்தில் 4.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

- வேலையின்மையானது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 சதவீதத்திலிருந்து 2025 ஆண்டின் முதல் காலாண்டில் 3.8 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 2024 இன் மதல் 9 மாதங்களுடன் ஒப்பிடுகையில் சரக்கு ஏற்றுமதியானது 2025 முதல் 9 மாதங்களில் ஐ.அ.டொ 8.5 பில்லியனிலிருந்து 9.1 பில்லியன் ஐ.அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

- வெளிநாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களின் மாற்றல்களானது 4.8 பில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 5.8 பில்லியன் ஐ.அ. டொலராக அதிகரித்துள்ளது.

- சுற்றுலாத்துறை வருமானமானது 2.3 பில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2.5 பில்லியன் ஐ.அ. டொலராக அதிகரித்துள்ளது பில்லியன் ஐ.அ. டொலராக அதிகரித்துள்ளது. அதேவேலை வருமானம் மற்றும் மானியங்களானது ரூபா 2.9 டிரிலியனிலிருந்து 3.8 டிரிலியனாக அதிகரித்துள்ளது.

- நாட்டின் சென்மதி சிலுலையில் முதன்மை மீதியானது ரூபா. 0.8 டிரிலியனிலிருந்து ரூபா 1.5 டிரிலியனாக கணிசமாக அதிகரித்துள்ளது.

- மேலும் மூலதனச்சந்தை செயற்பாட்டினை 2024 செப்டம்பருடன் ஒப்பிடுகையில் 2025 செப்டம்பரில் அனைத்து பங்கு விலைச்சுட்டியானது 11,855 இருந்து 21,779 ஆக அதிகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

- சந்தை மூலதனமாக்களானது ரூ.4.4 டிரிலியனிலிருந்து ரூ.7.8 டிரிலியனாக அதிகரித்துள்ளதோடு வெளிநாட்டு கொள்வனவானது ரூ. 37 பில்லியனிலிருந்து ரூ.47 பில்லியனாக அதிகரித்துள்ளது.

- 2025இன் 3ஆம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சியானது 5.4 சதவீத நேர்மறை யான வளர்ச்சியை பதிவுசெய்தது, இது பொருளாதாரம் ஒரு வழுவான பாதையில் செல்கின்றதை காட்டுகின்றது.

➢ சவால்கள்

- அரச வருமாதனத்தை அதிகரித்து அதிகரித்துவரும் பாதீட்டு பற்றூக்குறையை குறைத்தல்
- நிதி நிலைத்தன்மையின் சமநிலை
- பொதுக்கடனை மறுசீரமைத்தல்
- வரி அதிகரிப்பினூடாக பொதுமக்களின் வரிச்சுமையானது அதிகரித்தல்
- வருமான பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு
- அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தல்
- பொருளாதார சிக்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்தல்
- சுகாதார சேவைகளை தரமாகவும் தொடர்ச்சியாகவும் பெற்றுநுக்கொடுப்பதற்கு உரிய வசதிகளை தொடர்ந்து பெற்றுக்கொடுத்தல்

- **ஏதிர்கால இலக்குகள்**

மேலே கூறப்பட்டுள்ள கொள்கை முடிவுகளின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்ட அதே உபாயங்களை 2026இலும் செயற்படுத்தி இலங்கையை ஒரு உறுதியான பொருளாதார நிலையை நோக்கி வழிநடாத்துவதே முதன்மை நோக்கமாகும். 2025 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 5 சதவீத பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இச்சாதகமான நிதி இடைவெயியைப்பயன்படுத்தி வெளிநாட்டு ஒதுக்கம் மற்றும் நிதிப்பாதுகாப்பு ஒதுக்கத்தினை உறுதிப்படுததல், ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்ற கடனற்ற நிதி உள்வரவுகளை ஊக்குவித்தல் மற்றும் எதிரகால கடன் திருப்பிச்செலுத்தல்களை முறையாக மீண்டும் துவங்குவது இதன் நோக்கமாகும்.

மேலும் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலிருந்து தொடர்ச்சியக பொருளாதார சுருக்கத்தினை பதிவுசெய்தாலும் இலங்கை பொருளாதாரமானது 2025 இன் 3 ஆம் காலாண்டில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2025 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பூகோல அரசியல் சவால்களை எதிர்கொண்டாலும் அரசியல் ஸ்த்தித்தன்மையயை பேணிக்கொண்டு பொருளாதார நடவடிக்கைகளை விரைவாகவும் தொடர்ச்சியாகவும் விரிவுபடுத்தும் திறனானது ஒரு சாதனையாகும். 2025 ஆம் அண்டில் பின்னற்றப்பட்ட உத்திகளானது 2026 இல் நேர்மறையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு உதவும் என எதிர்பார்பக்கப்படுகின்றது.

அரச செலவினங்களானது உயர்ந்த சமூக பயன்களை அளிப்பதை உறுதிசெய்யும்வகையில் வரையறுக்கப்பட்ட அரச வரி வருமானமானது விவேகத்துடன் நிர்வகிப்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. 2025 இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை (SME) துறையினை வலுப்படுத்துதல், பொதுப்போக்குவர்த்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வலுவூட்டல் விவசாயத்தை முன்னேற்றல் உள்ளுர் தொழில் முயற்சிகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கு கவனம் செலுத்துவதோடு ஆராய்ச்சி அபிவிருத்தியை ஊக்குவித்து உள்நாட்டு மற்றம் ஏற்றுமதி சார்ந்த தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு தடைகளை நீக்குவதில் கவனம் செலுத்தப்படும்.

அதன் அடிப்படையில் பொதுச்சேவைகளை மறுசீரமைத்தல், ஏற்றக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் வேலைப்படையை முகாமைசெய்தல் மற்றும் 2025இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்கான சமூகநலத்திட்டங்களை தொடர்ந்தும் பேனுதல் மற்றும் பிற பொருளாதார உபாயங்களை செயற்படுத்துவதனூடாக பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்காளன அவசியமான நடவடிக்கைகளை எடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

அரசின் முதன்மை செலவினங்களை மொ.உ.உற்பத்தியல் 13 சதவீதத்திற்குள் பராமரிக்கும் அதேவேலை மிகவும் நலிவடைந்த தனிநபர்களுக்கான சமூகப்பாதுகாப்பு வலையை வலுப்படுத்தவும் மற்றும் அத்தியவசிய உட்கட்டமைப்பு மேம்பாபாட்டிற்கு அவசியமான பொது முதலீடுகளை மொ.உ.உற்பத்தியில் 4 சதவீதத்திற்கு குறையாமல் பராமசிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி நிலையற்ற தன்மையினை மாற்றி எதிர்வுகூறக்கூடிய உறுதித்தன்மையையும், சலுகைகளுக்கு பதிலாக நியாயத்தையும், குறுகிய கால ஆதாயங்களுக்குப் பதிலாக நீணட கால செழிப்புத்தன்மையை ஏற்படுத்தவதற்காக நிதிசார் உபாயங்கள் பயன்படுத்தப்படடு அனைவருக்கும் இறையான்மைகொண்ட, செழிப்பான மற்றம் கண்ணியமான நாட்டை கட்டியெழுப்புவதே முதன்மை நோக்கமாகும்.

செயலாளர்
நிதி, திட்டமிடல் மற்றம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

அத்தியாயம் 03 - 2025 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீடி- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025		குறிப்பு	உண்மை நிலை 2025 (ரூபா)	உண்மை நிலை 2024 (ரூபா)	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீடி-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீடி-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீடி-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	ஏசீடி-1
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		208,685,625,870	164,337,862,000	ஏசீடி-3
-	வைப்புகள்		1,506,587,711	2,606,610,436	ஏசீடி-4
-	முற்பணக் கணக்குகள்		37,726,999	31,887,568	ஏசீடி-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		210,229,940,580	166,976,360,004	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		210,229,940,580	166,976,360,004	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		1,177,907,477	4,485,632,599	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		209,052,033,103	162,490,727,405	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்		-	-	
482,110,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	424,850,271	436,015,542	ஏசீடி-2(ii)
9,166,371,489	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	8,605,601,251	3,825,301,951	ஏசீடி-2(ii)
238,942,898,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	238,214,330,568	186,628,710,063	ஏசீடி-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீடி-2(ii)
1,338,511	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	1,338,511	843,133	ஏசீடி-2(ii)
248,592,718,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		247,246,120,602	190,890,870,689	
	மூலதன செலவினம்				
145,200,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	25,784,403	13,071,991	ஏசீடி-2(ii)
1,209,800,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	892,009,089	8,782,383	ஏசீடி-2(ii)
47,500,000	மூலதன மாற்றல்கள்	12	9,825,000	10,285,976	ஏசீடி-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீடி-2(ii)
28,000,000	திறன் விருத்தி	14	3,453,286	10,682,065	ஏசீடி-2(ii)
12,851,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	10,515,625,348	30,613,595,447	ஏசீடி-2(ii)
14,281,500,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		11,446,697,126	30,656,417,862	
	வைப்புக் கொடுப்பனவுகள்		1,318,986,446	3,030,965,610	ஏசீடி-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		35,768,971	31,516,648	ஏசீடி-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		1,354,755,417	3,062,482,258	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		260,047,573,145	224,609,770,809	
-	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(50,995,540,042)	(62,119,043,404)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(50,995,540,042)	(62,119,043,404)	ஏசீடி-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீடி-3
			(50,995,540,042)	(62,119,043,404)	

3.2 நிதிச் நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2025 ரூபா	2024 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	14,439,655,868	14,423,181,248
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	61,616,531	63,574,559
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**14,501,272,399**	14,486,755,807
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(335,716,863)	(146,157,570)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		14,439,655,868	14,423,181,248
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	397,333,394	209,732,129
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**14,501,272,399**	14,486,755,807

பக்க இலக்கம் 06 முதல் வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.்.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் முதல் வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02.்.2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: [illegible]
பதவி: [illegible]
திகதி: 26.02.2026
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Planning and Economic Development
Ministry of Finance
Colombo 01

....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: டீ. எச். எஸ் புல்லபெரும
பதவி: மேலதிக செயலாளர்
D.H.S. Pullaperuma
Additional Secretary
Ministry of Finance, Planning and Economic Development.

....
பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்
பெயர்: ஈ. எம். யு. எஸ். ஏக்கநாயக்க
திகதி: 2026/02/25
E.M.U.S. Ekanayaka
Chief Accountant
Ministry of Finance, Planning and Economic Development

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2025 ரூபா	2024 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	85,859,292
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	153,028,795	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	208,685,625,870	164,337,862,000
முற்பணங்களை அறவிடல்	36,187,423	31,013,493
வைப்புக்களின் பெறுகை	1,506,587,711	2,606,610,436
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**210,381,429,799**	**167,061,345,222**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	9,014,799,731	4,258,085,169
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	197,579,303,636	154,686,962,673
மூலதன சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு, மூலதன நிதி மாற்றங்கள், திறன் மேம்பாடு மற்றும் பிற மூலதனச் செலவுகள்	1,135,689,845	559,545,325
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	2,405,533	1,368,984
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	1,177,907,478	4,485,632,599
முற்பணக் கொடுப்பனவு	35,576,703	30,002,478
வைப்புக் கொடுப்பனவு	1,318,986,446	3,030,965,610
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**210,264,669,372**	**167,052,562,838**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**116,760,427**	8,782,384
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள்	116,760,427	8,782,383
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**116,760,427**	8,782,383
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(116,760,427)**	(8,782,383)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடும் அடிப்படை

1) **நிதிக் கூற்றுக்கள் தயார்ப்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல் 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

- ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் “அறிக்கையிடலின் அடிப்படை” என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

- அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே “அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் வெளிப்படுத்தப்படவேண்டும்.

3.5 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		திரட்டப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக %
	ஏற்புடையதல்ல				

3.5.1 வரி வழக்குகளை விசாரிப்பதன் மூலம் அரசிற்காக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்ட வரி வருவாய் விபரங்கள்

வருடம்	வழக்குகளின் எண்ணிக்கை	வரி வழக்கு தொடர்பான வரி வருமானத்தின் பெறுமதி (ரூபா)	
		உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (25%)	நிதி அமைச்சு (10%)
2022	174	519,362,707	68,814,911
2023	343	2,808,304,990	158,333,005
2024	136	2,498,114,360	271,568,425
2025	342	984,297.460 ** 256,584,058 ***	23,583,324
மொத்தம்	**995**	**7,066,663,575**	**522,299,665**

3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ஏற்பாடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்		உண்மை செலவினம் (ரூபா)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
	ஆரம்ப ஏற்பாடு (ரூபா)	இறுதி ஏற்பாடு (ரூபா)		
மீண்டுவரும்	248,705,718,000.00	248,592,718,000.00	247,246,120,601.00	99%
மூலதனம்	14,001,500,000.00	14,281,500,000.00	11,446,697,126.00	80%

3.7 நி.ஓ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சர்களின்/ திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

தொ இல	ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்	ஏற்பாட்டின் நோக்கம்	ஏற்பாடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
			ஆரம்ப ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
01	ஜனாதிபதி செயலகம்	ஜனாதிபதி ஆலோசகர் திரு துமிந்த ஹுலங்கமுவ அவர்களுக்கான விமாச்சீட்டுக்கான கொடுப்பனவு	411,500.00	411,500.00	411,500.00	100%
02	இலங்கை தேர்தல் ஆணைக்குழு	2024 ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்னத்தேர்தல் மற்றும் 2025 உள்ளுராட்சி மன்றத் தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு	1,611,704.00	1,611,704.00	1,611,704.00	100%
03	ஓய்வூதிய திணைக்களம்	கடன் நிலுவை செலுத்ததல்	382,329.00	382,329.00	382,329.00	100%
		திரு. வீ தவராஜா	115,000.00	115,000.00	115,000.00	
		திரு. டி.டப்.எஸ் ரம்யவன்ச	145,922.00	145,922.00	145,922.00	
		திரு. எச்.வீ.சீ. குமார	121,407.00	121,407.00	121,407.00	

3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

வருமான குறியீடு	குறியீட்டின் விபரம்	2025.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி ஆய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை	2025 12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை	முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை	முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	3,756,391,027.70	-	
9152	இயந்திரசாதனம்	-	2,242,188,708.22	-	
9153	காணி	-	8,389,900,000.00	-	
9154	அருவமான சொத்துக்கள்	-	51,176,132.08	-	
